# சாட்சிய வாக்குமூலம்

## மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், மயிலாடுதுறை.

அமர்வு வழக்கு எண் 75/2019

| | | | |
|---|---|---|---|
| அரசு தரப்பு சாட்சி | 4 (LW 5) | நாள் | 29.07.2024 |
| பெயர் | அண்ணாதுரை | ஜாதி | |
| தந்தை பெயர் | திருமேனி | தொழில் | |
| கிராமம் | | சமயம் | |
| தாலுக்கா | காரைக்கால் | வயது | 56 |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லை.)

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

முதல் விசாரணை

நான் காரைக்கால், அய்யனார்கோவில் தெருவில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். 11.11.2013 அன்று நானும் எங்கள் ஊரை சேர்ந்த வேலாயுதம் என்பவரும் திருக்கடையூர் கோவிலுக்கு போய் சாமிகும்பிட்டு விட்டு வீட்டிற்கு திரும்பி செல்ல திருக்கடையூர் பஸ் ஸ்டாப்பில் மதியம் 02.00 மணியளவில் நின்று கொண்டிருந்தோம். ஆஜர் எதிரியை போலிசார் திருக்கடையூர் பஸ் ஸ்டாப் அருகில் விசாரித்து கொண்டிருந்தார்கள். எதிரி நண்டலாறு செக் போஸ்ட்டில் லாரியை மோதி விட்டதாக சொன்னார்கள். எதிரி ஓட்டிவந்த லாரி பட்டறையில் நிற்பதாக சொன்னார்கள். எங்களை எதிரியை விசாரித்ததற்காக கையெழுத்து போடுமாறு சொன்னார்கள். அதனால் நானும் வேலாயுதம் என்பவரும் போலிசார் எழுதிய பேப்பரில் கையெழுத்துபோட்டோம் என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. இரண்டாவது சாட்சி கையெழுத்து வேலாயுதம்என்பவருடையது. எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதல் சாட்சி கையெழுத்து மட்டும் **அசாஆ. 2** ஆகும். அந்த லாரியின் பதிவெண் TN 57 1902 அந்த லாரியை கைப்பற்றியதற்காக கைப்பற்றுதல் மகசரில் நானும் வேலாயுதம் என்பவரும் கையெழுத்துபோட்டோம் அந்த கைப்பற்றுதல் மகசரில்உள்ள முதல் சாட்சி கையெழுத்து என்னுடையது. இரண்டாவது சாட்சி கையெழுத்து வேலாயுதம் என்பவருடையது. கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல்

சாட்சி கையெழுத்து **அசாஆ. 3** ஆகும்.  திருவெண்காடு போலிசார் இந்த வழக்கு சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை.  எனவே குறுக்கு விசாரணை இல்லை.